<u>பத்திரிக்கை செய்தி</u>

<u>பிணையில்லா பிடியாணையில் சர்வேயர் கைது</u>

இவ்வழக்கின் புகார்தாரர் திரு. விஜயகுமார் த/பெ. P. கோவிந்தசாமி எண். 59, 'F' பிளாக், முதல் மெயின் ரோடு, மேற்கு தணிக்காச்சலம் நகர், சென்னை - 110 என்பவர் Kreta Contruction என்ற நிறுவனத்தில் Planning Engineering ஆக பணிபுரிந்து வந்தார். அவர் அம்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் பட்டா மாற்றம் செய்யவேண்டி திரு. அமீர் என்பவருக்காக விண்ணப்பம் செய்திருந்தார். அப்போது அம்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் Firka Surveyor ஆக பணிபுரியும் திரு. தங்கவேலு (பணியிடை நீக்கம்) என்பவர் பட்டா மாற்றம் செய்ய ரூ. 10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார்.

24.11.2008 ஆம் தேதி பிற்பகல் 4.15 மணி முதல் 4.25 மணி வரை பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு புகார்தாரர் திரு. விஜயகுமார் என்பவரிடமிருந்து லஞ்சப்பணம் ரூ. 10,000/- த்தை மீண்டும் கேட்டு பெற்றுக்கொண்டதனால் திரு. தங்கவேலு, Firka Surveyor, அம்பத்தூர் தாலுக்கா அலுவலகம் என்பவர் கையும் களவுமாக பிடிபட்டார். திரு. தங்கவேலு, Firka Surveyor, அம்பத்தூர் தாலுக்கா அலுவலகம் என்பவரை 24.11.2008 தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தபட்டார்.

இவ்வழக்கு கனம் தலைமை நீதித்துறை நடுவர், திருவள்ளூர் அவர்கள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு Special CC. No. 13/2010 ன்படி நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கனம் தலைமை நீதித்துறை நடுவர், திருவள்ளூர் அவர்கள் திரு. தங்கவேலு என்பவர் குற்றவாளி என்று 11.01.2016 ம் தேதி தீர்ப்பு வழங்கினார். அதன்பின்பு திரு. தங்கவேலு சென்னை உயர்நீதிமன்றத்தில் Criminal Appeal No. 73/2016 மேல்முறையீடு செய்தார். 20.03.2023 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் மேல்முறையீட்டு மனுவை நிராகரித்து தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவள்ளூர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை உறுதி செய்தார்.

அதன்பேரில் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவள்ளூர் அவர்கள் 04.05.2023 அன்று திரு. தங்கவேலுவை கைது செய்து ஆஜர்ப்படுத்த பிணையில்லா பிடியாணை வழங்கினார். 07.06.2023 மாலை 6.00 மணியளவில் திரு. தங்கவேலுவை திருப்பத்தூரில் கைது செய்து இன்று 08.06.2023 ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டார்.

**PRESS NOTE**

**EXECUTION OF NBW WARRANT OF Tr.THANGAVELU, FIRKA SURVEYOR, AMBATTUR TALUK OFFICE**

The complainant Tr. G. Vijayakumar S/o P. Govindasamy is residing at No.59, 'F' Block, Ist Main Road, West Thanikachalam Nagar, Chennai-110. The Complainant Tr. G. Vijayakumar was working as Planning Engineering in Kreta Constructions. He had applied name transfer patta at office of the Ambattur Taluk Office, Ambattur on behalf of Tr. Amir. At that time Tr. Thangavelu, Firka Surveyor, Ambattur Taluk Office, Ambattur,(Under Suspension) demanded Rs. 25,000/- bribe and an advance of Rs. 10,000/- from the complainant to transfer of patta.

In this connection a Trap was organized on 24.11.2008 between 4.15 P.M. hrs to 4.25 P.M. Tr. Thangavelu, Firka Surveyor, Ambattur Taluk Office reiterated his earlier demand and accepted Rs. 10,000/- from the complainant in the presence official witness. The accused was caught red handed while receiving the bribe amount of Rs.10,000/- from the complainant. Tr. Thangavelu, Firka Surveyor, Ambattur Taluk Office was arrested on 24.11.2008 at 18.00 hrs and remanded for judicial custody.

Further the case was charge sheeted vide CC. No. 13/2010 in Chief Judicial Magistrate, Thiruvallur u/s. 7 and 13(2) r/w 13(1)(d) Prevention of Corruption Act 1988. The judge was convicted on 11.01.2016 the accused is found guilty u/s. 7 of Prevention and Corruption Act 1988 and the accused is convicted and sentenced to undergo R.I. for 1 year and also sentenced to pay fine Rs. 10,000/- in default simple imprisonment for 3 months and also found guilty u/s 13(2) r/w 13(1)(d) Prevention of Corruption Act 1988 and the accused is convicted and sentenced to

undergo R.I. for 2 years and also sentenced to pay fine of Rs. 10,000/- in default simple imprisonment for 3 months. The sentence imposed for both offence shall run concurrently.

In this connection the accused filed appeal before the Hon'ble High Court of Madras vide Crl. No. 73/2016. The Hon'ble Judge held the judgement of lower court on 20.03.2023 and directed the trial court to take steps to secure the accused/appellant and commit him to prison to undergo the remaining period of sentence.

The warrant was issued warrant copy by CJM, Thiruvallur on 04.05.2023. In this connection the accused Tr. Thangavelu, Firka Surveyor, Ambattur Taluk Office was arrested at Tiruppattur on 07.06.2023 at 18.00 hrs to produced before CJM, Thiruvallur and remanded to Judicial Custody.